

## 2. மேலதிகமான மொழிக் கருவிகளை அறிமுகப்படுத்தல் (வாக்கியத் தொடக்கங்கள், இணைப்புச்சொற்கள் விசேட சொற்கள் முதலியன)

2 - 9 ஆந் தரம் | 20 மணித்துளிகள்



சொற்கள் மட்டுமன்றி, சில எழுத்து ஒப்படைகளுக்காக முன்னேற்பாடாக விரிவாக்கப்பட்ட மொழிக்கூறுகளை வாய்வழி அல்லது எழுத்தில் மாணவர்களிடமிருந்து ஒருங்குசேர்க்கும் முறை அவர்களின் வெளியீட்டுத் திறனை விரிவாக்கும் விலைமதிப்பற்ற பங்களிப்பாகும். அத்தகைய பட்டியல் ஒன்றினை நிறுவுதல் பேச்சு ஒப்படைகளிலிருந்தே என்பது பெரும்பாலும் அறியப்படுகின்றது (அதாவது, உரையாடல்களுக்கான பயன்மிகு தொடர்கள்), ஆனால் எழுத்து வேலைகள் தொடர்பாகவும் அதேமாதிரி பயன்பாடுடையது. மொழிக் கூறுகளின் தெரிவு உண்மையான எழுத்து ஒப்படையிலேயே தங்கியுள்ளது என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளில் காணலாம்:

- ஒரு பட்டறிவு (விடுமுறை, சிறுபயணம், வீரதீரம், முதலியன) பற்றி அறிக்கையிடு முன்னர், "அதன் பின்னர்…." என்னும் பொதுவான பன்முறைக் கையாள்கையைத் தவிர்த்துக்கொள்வதற்காக பல்வகை வாக்கியத் தொடக்கங்களை அறியவும்.




எழுத்துருவை எழுதுவதற்கு முன், காட்சிப்படு எடுத்துக்காட்டுகளை வாய்வழி பயிற்சி செய்வது ஒரு நல்ல திட்டமாகும். எழுத்து ஒப்படைகளில், மாணவர்கள் பட்டியலிலுள்ள மூன்று வாக்கியத் தொடக்கங்களை பயன்படுத்த அறிவுறுத்தப்படுகின்றனர். விவரண வேலையைத் தொடங்கு முன்னர் (ஒரு படத்தை அல்லது இயற்கை நிலக்காட்சியை விவரித்தல்) மாணவர்கள் பொருத்தமான வேற்றுமை உருபுகளுடன் இருப்பிட அடையாளங்காட்டிகள், இடங்கள், நிலைகள் ஆகியனவற்றைத் திரட்டவேண்டும். ("வீட்டுக்கு முன்னால் நிற்கின்றது…", "பின்னணியில் நான் பார்க்கமுடிகிறது…", "மலைகளுக்கு மேல்…") அல்லது ஒருவரின் உணர்வுகளைப் புலப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் ("நான் குறிப்பாக விரும்புவது…", "அது நல்லது என நான் எண்ணுகிறேன்…", "ஏன் என எனக்கு நன்றாக விளங்கவில்லை…", "கலைஞன் …என்னால் கற்பனை பண்ண முடிகிறது" முதலியன.

- எடுத்துக்காட்டாக, குடிபுகுந்தவர் என்ற வகையில் வாழ்வின் நன்மைகள், குறைபாடுகள் என்னும் பொருள் பற்றிய ஓர் எழுத்துருவை எழுத முன்னர், வெறுமனே "நான் நினைக்கிறேன்…" எனப்பட்ட: "…என நான் நம்புகிறேன்", "என் பட்டறிவில்…", "என் பார்வையில்…", "என் முன்னோக்கில்…", "…என நான் நம்புகிறேன்", "…என நான் ஐயுறுகிறேன்" என்பவற்றை விட ஒருவருடைய உணர்வுகளை நம்பத்தகு முறையில் வெளிப்படுத்தக்கூடிய பெருமளவு பல்வகைத் தொடர்களைத் திரட்டவேண்டும். இங்குங்கூட, இவ்வெளிப்பாடுகளை முதலில் மாணவர்கள் வாய்வழியாகப் பயிற்சி செய்யவேண்டும் எனப் பரிந்துரைக்கப்படுகிறது. பின்னர் அவர்களுடைய எழுத்து ஒப்படைகளில், திரட்டிய பட்டியலிலிருந்து குறைந்தது மூன்று தொடர்களையாவது பயன்படுத்தவேண்டும்.